எடுத்துக்கொண்டதை எதிர்த்து அக்கோயில் நிர்வாகியாரால் ராணிப்பேட்டை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனு ஏதேனும் 10-3-1965 அன்று கொடுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The inam in question has vested in the Government free of all encumbrances with effect from 15th February 1965 according to Section 3 (b) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. The Assistant Settlement Officer, Madras, has been requested to initiate action under the provisions of the Act.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இன்னும்கூட கோவில் நிலத்தை பஞ்சாயத்து போர்டு ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. கோவில் நிர்வாகிகள் அரசாங்கத்திற்கு ஏதாவது நாக்கிது அனுப்பி வைத்தார்களா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் சொன்ன விவரத்தைவிட மேலே ஒன்றும் இல்லை.

தாம்பிரபரணி கால்வாய்

*273 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி கால்வாய்களின் புனரமைப்பு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டனவா ?

(இ) இல்லை எனில் காரணமென்ன, எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

(உ) மேற்படி கால்வாய் வேலைகள் புனரமைப்பிற்காக பொதுப்பணித் துறை ஸ்பெஷல் டிவிஷன் ஒன்றும் நிறுவும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை. இவ்வேலைகள் சிறிய பாசன விசேஷ திட்ட நிர்வாக பொறியாளரால் செயலாக்கப்படுகின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இவ்வேலைகளுக்கெல்லாம் மொத்தத்தில் எவ்வளவு தொகை எஸ்டிமேட் செய்யப்பட்டிருக்கிறது ? வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 2-3 ஆண்டுகள் ஆகியும் பூர்த்தியாகாத காரணம் என்ன ? தண்டத் தீர்வைக்கும் கால்வாய் புனரமைப்புக்கும் சம்பந்தம் இருப்பதால் துரிதமாக வேலையை முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

[9th August 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : மொத்தம் எவ்வளவு அனுமதிக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லே. ஆனால் இந்த வேலேகள் நிர்ணயிக்கப்பட்ட முறைப்படித்தான் நடந்துகொண்டிருக்கின்றன.

நாங்குநேரி தாலூகா

* 274 *கேள்வி.—திரு. எ. சுவாமிதாஸ் :* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நாங்குநேரி தாலுகாவை கன்னியாகுமரி மாவட்டத்துடன் இணைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், எப்போது இணைப்பு ஏற்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

அரசாங்க பஸ்களால் விபத்துகள்

* 275 *கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) 1964-65-ல் சென்னை நகரத்தில் ஓடும் அரசாங்க பஸ்களில் அடிபட்டவர்கள், காயம் பட்டு இறந்தவர்கள் முறையே எத்தனை பேர்கள் ?

(இ) இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள் யாருக்கேனும் நஷ்டஈடு கொடுக்கப்பட்டுள்ளதா ? ஆமெனில் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Number of persons injured—265. Number of persons injured and died—18.

(*b*) Yes. Compensation has been paid in 13 cases. The total amount paid is Rs. 37,940.57.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் அரசாங்க பஸ்களே வேகமாக ஓட்டுவதுதான் என்று புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? வேகமாக ஓட்டுவதைக் கொஞ்சம் மெதுவாக ஓட்டும்படி சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : வேகமாக ஓட்டுவது மட்டும் காரணமாக இருக்க முடியாது. வேறுபல காரணங்கள் இருக்கின்றன.

Food poisoning

* 276 *Q.*—SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU :
SRI A. K. SUBBIAH :
SRI M. KARUNANITHI :
} Will the Hon. the Minister for Public Health be pleased to state—